(*c*) if so, whether a copy of the same will be placed on the table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Particulars relating to some of the indicators for the State as a whole for the years 1960–61 and 1961–62 have been furnished to the Planning Commission. The question of identifying the backward pockets in this State and collection of data for the above pockets is under consideration.

(*c*) Does not arise as no final report has been sent to the Planning Commission.

Backward areas

* 74 *Q.*—SRI A. K. SUBBIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the State Government have received from the Union Government any representation regarding the backward areas in the Madras State and the remarks offered by the State Government on the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No. A copy of the representation referred to by the hon. Member regarding the backward areas in the Madras State has, however, been obtained from the Government of India. The Planning Commission has proposed to consider the suggestions made in the above representation in connection with the general question of development of specially backward areas in the country.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : கனம் சபாநாயகர் அவர்களே, பிற்பட்ட பகுதிகளுக்கு மத்திய சர்க்காரிடமிருந்தோ அல்லது திட்டக் கமிஷனிடமிருந்தோ எந்தெந்த வகையில் உதவி செய்யப்பட்டு வருகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி தனியாக கேள்வி போடவேண்டும்.

High School Students (Fee-concessions)

* 75 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the total number of students studying in the high schools as on March 1962 ; and

(*b*) the number of students among them enjoying fee-concessions?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 730,107.

(*b*) 554,289.

திரு எஸ். மாதவன் : கனம் தலைவர் அவர்களே, இவ்வாறு சலுகைகள் கொடுத்திருப்பது அவ்வளவு அதிகமாக இல்லை. இன்னும் அதிகப்படியான சலுகைகளை அளிக்க அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தற்கால நிலையில் சர்க்கார் இதை நிறைவேற்றுவதற்கு இல்லை. ஆனால் அதிகச் சலுகைகள் கொடுக்கவேண்டுமென்ற யோசனை அரசாங்கத்தினிடம் இருக்கிறது.

திரு. கே. மூக்கையா தேவர் : இப்படி மாணவர்களை எடுப்பது மொத்தத் தொகையில் எவ்வளவு சதவிகிதம் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், மாணவர்களுக்கு இப்படிப் பட்ட சம்பளச் சலுகைகள் கொடுப்பது, ஜாதி அடிப்படையிலா அல்லது வேறு எந்த அடிப்படையில் கொடுக்கப் படுகிறது? ஜாதி அடிப்படையில் இல்லாமல் வருமான அடிப்படையில் கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு ஏதாவது நோக்கம் இருக்கிறதா ? அப்படியானல், அது எந்த வருடத்திலிருந்து அமுலுக்கு வரும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்த முறையிலும் சம்பளச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

தனியார் பள்ளிகள்

* 76 **கேள்வி.—திரு.** முனு ஆதி : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

தனியார் நடத்தும் ஆரம்ப, உயர் துவக்க, உயர்நிலைப் பள்ளிகளில் மாணவ மாணவியர்களிடமிருந்து சம்பளம் வாங்குவது சம்பந்தமாக அரசாங்கத்தின் திட்டம் என்ன?

THE HON. SRI **M. BHAKTAVATSALAM** : Managements of elementary schools should not levy fees in Standards I to V of elementary schools if they expect a grant from State funds. Private managements maintaining higher elementary and secondary schools can levy fees from pupils in accordance with the general orders on the subject. The fee-concessions extended by Government from time to time will be available to students in all schools aided by Government.

திரு. முனு ஆதி : கனம் தலைவர் அவர்களே, தனியார் துறையில் நடத்தப்படும் உயர்நிலை ஆரம்பப் பள்ளிகளில் கட்டிடம் கட்டுவதற்கு என்று பல விதத்தில் நிதி வசூலிக்கப்படுகின்றனவே, அதனால் மாணவர்களிடத்திலும் பெற்றோர்களிடத்திலும் ஆர்வம் குறைந்து போய் விடுகிறதே, அந்த முறையைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உயர்நிலைப் பள்ளிகளுக்குச் சம்பளச் சலுகைகள் காட்டுவதற்கு அரசாங்கத்திலிருந்து மானியம் கொடுக்கப்படுகிறது. அப்படி சம்பளம் வாங்குகிறவர்கள் சர்க்காரிடமிருந்து மானியத்தை எதிர் பார்க்க முடியாது. அதற்கு வேண்டிய விதிகள் இருக்கின்றன. கட்டிடம் கட்டுவதற்கு